# தீவினையச்சம்

ஜொகூர், சா ஆ தர்மா மண்டபத்தில்
துறவி அவர்கள் ஆற்றிய
உரையின் தொகுப்பு

# தீவினையச்சம்

பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | | பக்கம் |
| 1. | தீய செயல்களை | 1 |
| 2. | பன்றி இறைச்சி வியாபாரி குண்டனின் கதை | 10 |
| 3. | ஐந்து இழப்புகள் | 12 |

# தீவினையச்சம்

இன்று உங்களுக்குத் தீய செயல்களைக் கண்டு ஏன் அஞ்ச வேண்டும் என்பதை விளக்கிக் கூறுகிறேன்.

"தீவினை' என்பது தீய செயல்கள். தீய செயல்கள் என்பது, நான் என்னும் அகந்தையில், தன் நலனைப் பெரிதெனக் கருதி, பிறருக்குக் கேடு செய்தல் ஆகும்.

"தீவினையச்சம்' என்பது தீய செயல்களைக் கண்டு அஞ்ச வேண்டும். ஒருவன் தன் நலனைப் பெரிதனக் கருதி பிறருக்குக் கேடு செய்தான் என்றால், அச்செயலால் மற்றவர்களுக்குத் துன்பம் வருவதோடுமட்டுமின்றி, இவனுக்கும் அதன் பிற்பயன் துன்பம் தரும். தனக்கும், பிறருக்கும் துன்பம் கொடுப்பதால், தீய செயல்களைக் கண்டு அஞ்ச வேண்டும்.

உதாரணத்திற்குத் திருட்டை எடுத்துக் கொள்வோம். ஒருவன் தன் இலாபத்தைப் பெரிதெனக் கருதி, பிறன் பொருளை வஞ்சித்தால், அப்பொருளை இழந்தவன் துன்புறுவான். ஆகவே, திருட்டு என்னும் தீய செயல், பிறருக்குத் துன்பம் தரும். வஞ்சித்தவனுக்கு அப்பொழுது இலாபம் கிடைத்த போதிலும், பின்னால் இவனுக்கும் அச்செயலால் கேடு வரும். எப்படி கேடு வரும்? தான் செய்த தீயச் செயல் மற்றவர்களுக்குத் தெரிந்து விடுமோ என்ற அச்சம் இவன் உள்ளத்தில் எப்போதும் இருக்கும். இவன் செயல் மற்றவர்களுக்குத் தெரியவரும் பொழுது, மக்கள் இவனைத் தூற்றுவார்கள். சட்ட காப்பாளர்கள் இவனைப் பிடித்து, விசாரித்து தண்டனை வழங்குவார்கள். அடுத்து, இவன் செய்தது பாவச் செயலாதலால், அடுத்த உலகத்திற்கு இவன் பாவத்தைத் தேடிக் கொள்வான். ஆகவே, திருட்டு தனக்கும், பிறருக்கும் துன்பம் கொடுப்பதால், அத்தீயச் செயலைக் கண்டு அஞ்ச வேண்டும்.

தீய செயல்கள் பிறருக்கும் துன்பத்தைக்கொடுத்து, அச்செயல்களைச் செய்வோருக்கும் இரண்டு உலகத்திலும் துன்பம் கொடுப்பதால் தீயச் செயல்களைக் கண்டு அஞ்ச வேண்டும்.

பகவான் புத்தர், பாவங்கள் செய்வோர், இங்கும் துன்பப் படுவார்கள், அடுத்த உலகத்திலும் துன்பப்படுவார்கள் என்று சொல்கிறார்.

பகவான் புத்தர் இதனை இவ்வாறு கூறியுள்ளார்.

> *"இங்கு சிலர், மனதில் தவறான கருத்தை வைத்து, பெரியோர்களை இகழ்ந்து, பாவங்கள் செய்து வாழ்வதைக் கண்டேன். அவர்கள் இங்கும் துன்பப்படுவதைக் கண்டேன்; அடுத்த உலகிலும் துன்பப் படுவதைக் கண்டேன். இதை மற்றவர்கள் சொல்லக் கேட்டு நான் உங்களுக்குச் சொல்லவில்லை. நானே பார்த்து, அறிந்து உங்களுக்குச் சொல்கிறேன். பாவங்கள் செய்து வாழ்வோர் இங்கும் துன்பப் படுவார்கள்; அடுத்த உலகிலும் துன்பப்படுவார்கள்."*

அதாவது பகவான் புத்தர் என்ன சொல்கிறார் என்றால், இங்குச் சிலர் மனதில் தவறான கருத்தை வைத்து, பெரியோர்களை இகழ்ந்து, பழி பாவங்களுக்கு அஞ்சாமல், தீயச் செயல்கள் செய்து வாழ்வார்கள். தவறான கருத்து என்பது, இவர்கள், "தீவினை இல்லை. அதாவது, தீயச் செயல்களுக்குப் பிற்பயன் இல்லை; அடுத்த உலகம் இல்லை; நரகலோகம் இல்லை" போன்ற தவறான கருத்துக்களை வைத்திருப்பார்கள். அடுத்து இவர்கள், மற்றவர்களையும், தீவினை இல்லை; தீயச் செயல்களுக்குப் பிற்பயன் இல்லை; அடுத்த உலகம் இல்லை என்று அவர்களையும் நம்ப வைப்பார்கள்.

அதோடு மட்டுமின்றி, இவர்கள் இவ்வுலகில், தீவினை உண்டு; அடுத்த உலகம் உண்டு; நரகலோகம் உண்டு என்று பெரியோர்கள் செய்த உபதேசங்களை இகழ்ந்து பேசி அவர்களையும் தூற்றுவார்கள். இவ்வாறான தவறான கருத்தை வைத்து, பெரியோர்களை இகழ்ந்து பேசி, பல பாவங்கள் செய்து வாழ்பவர்களை பகவான் புத்தர், "இங்கும் அவர்கள் துன்பப்பட்டு, இறந்தபின் நரகத்திலும் துன்பப்படுவதை நான் பார்த்து உங்களுக்குச் சொல்கிறேன்' என்று சொல்கிறார்.

அதாவது, இங்கு ஒரு மனிதன் கடுமையான துன்பங்களுக்கு ஆளாகி துன்பப்படுவதைப் பார்த்து, அதன் காரணத்தை அவர் ஆராய்ந்து பார்த்தபோது, அதன் காரணம், அவன் முற்பிறப்பிலும், இப்பிறப்பிலும் செய்த தீய செயல்களே, என்று பகவான் புத்தர் சொல்கின்றார்.

அதுமட்டுமல்ல, பாவங்கள் செய்து வாழ்வோர் இறந்தபின், நரகத்திலோ அல்லது மிருகமாகவோ பேயாகவோ பிறந்து துன்பப்படுவதையும் அவர் தன் தெய்வீகப் பார்வையால் பார்க்க முடியும் என்று சொல்கின்றார். நாம் ஒன்றை இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும். பகவான் புத்தர், மனிதர்களுக்கு இல்லாத அறிவும், தெய்வீகப் பார்வையும் தனக்கு உண்டென்றும், பாவங்கள் செய்தோர் இறந்தபின் நரகத்திலோ, அல்லது மிருகமாகவோ

பேயாகவோபிறந்து துன்பப்படுவதையும் தான் தன் தெய்வீகப் பார்வையால் பார்க்க முடியுமென்றும் இவ்வுலகிற்குக் கூறுகின்றார்.

தொடர்ந்து பகவான் புத்தர் " இதை நான் மற்றவர்கள் சொல்லக் கேட்டு உங்களுக்குச் சொல்லவில்லை. நானே என் தெய்வீகப் பார்வையால் பார்த்து, நானே அறிந்து இவ்வுலகிற்குச் சொல்கிறேன். பாவங்கள் செய்து வாழ்வோர், இங்கும் துன்பப்படுவார்கள், அடுத்த உலகத்திலும் துன்பப்படுவார்கள்" என்று சொல்கின்றார்.

ஆகவே, நாம் தீயச் செயல்களைக் கண்டு அஞ்ச வேண்டும். ஏன் அஞ்ச வேண்டும்? தீயச் செயல்கள் இரண்டு உலகத்திலும் துன்பத்தைக் கொடுப்பதால் தீய செயலைக் கண்டு அஞ்ச வேண்டும். எப்படி அஞ்ச வேண்டும்? நெருப்பை விடக் கொடியது எனக் கருதி அஞ்ச வேண்டும். இதனைத்தான் திருவள்ளுவர் இவ்வாறு சொல்கிறார்.

***தீயவை தீய பயத்தலால் தீயவை***
***தீயினும் அஞ்சப் படும்.***

அதாவது, தீயச் செயல்கள் பெரும் துன்பத்தைக் கொடுப்பதால், தீயச் செயல்களை நெருப்பினும் கொடியதாகக் கருதி அஞ்ச வேண்டும் என்று திருவள்ளுவர் சொல்கின்றார். நெருப்பு அதிக பட்சம் இந்த உடலைத்தான் அழித்து மரணத்தைக் கொடுக்கும். நெருப்பு மனிதன் ஒருவனை நரகத்துக்கு அனுப்பாது. ஆனால் தீய செயல்களோ, இங்கு துன்பத்தைக் கொடுத்து, உடலைவிட்டு உயிர் பிரிந்தபின் நரகத்துக்கு அனுப்பும். ஆகவே, தீய செயல்களைத் தீயினும் கொடியதாகக் கருதி அஞ்சி, பாவங்கள் செய்யாமல் வாழ வேண்டும் என்று திருவள்ளுவர் சொல்கின்றார்.

இங்கு மனிதனுடைய வாழ்க்கை மரணத்தில்தான் முடியும். ஏழையும் ஒருநாள் இறக்கத்தான் வேண்டும்; செல்வம் படைத்தவனும் ஒருநாள் இறக்கத்தான் வேண்டும். கல்லாதவனும் இறக்கத்தான் வேண்டும்; கற்றோரும் இறக்கத்தான் வேண்டும். நல்லோரும் ஒருநாள் இறக்கத்தான் வேண்டும்; தீயோரும் ஒருநாள் இறக்கத்தான் வேண்டும். மனிதன் இறந்த மறுநாளே அவன் கட்டிய வீட்டிலிருந்து அவன் உடலை எறிந்து விடுவார்கள். அவன் தேடிய பொருளும், அவன் கட்டிய வீடும் அவனோடு வருவதில்லை. அவன் உடலும் மண்ணில் மக்கிப்போய் விடும்.

பெரியோர்கள் அடுத்த உலகம் ஒன்று உண்டு என்று சொல்கிறார்கள். ஆனால், மனிதனோடு, அவன் தேடிய இவ்வுலக பொருள்கள் யாவும் வருவதில்லை. அடுத்த உலகத்திற்கு அவனோடு வருவது எது? அடுத்த உலகத்திற்கு அவன் எடுத்துச் செல்வது எது? அடுத்த உலகம் உண்டு

ஆனால், அவன் இங்கு தேடிய உலகப் பொருட்கள் எதுவும் அவனோடு வருவதில்லையே அவனோடு வரக்கூடியது எது?

அடுத்த உலகத்திற்குத் தன்னோடு எடுத்துச் செல்லக்கூடிய பொருள் உண்மையிலேயே மனிதன் இவ்வுலகில் தேடிய பொருள் என்றும், அது அவரவர் செய்த தீயச் செயல்களும் அவரவர் செய்த நற்செயல்களும்தான் என்று பெரியோர்கள் சொல்கின்றார்கள்.

இவ்வுலகில் மனிதன் தேடிய பொருள் எதுவென்று கேட்டபின், அவரவர் செய்த செயல்களே! அவரவர் செய்த தீயச் செயல்களும், அவரவர் செய்த நற்செயல்களுமே இவ்வுலகில் மனிதன் தேடிய பொருள். உலகப் பொருள் யாவும் அடுத்த உலகத்திற்கு வருவதில்லை. அவரோடு வரக்கூடிய பொருள், அவரவர் செய்த தீயச் செயல்களும், அவரவர் செய்த நற்செயல்களும்தான். அடுத்த உலகிற்கு மனிதனோடு வரக்கூடிய செல்வம், அவரவர் செய்த பாவமும், அவரவர் செய்த புண்ணியமும் தான்.

இதனை ஔவை இவ்வாறு சொல்கின்றார்.

*புண்ணியமாம் பாவம் போம் போன நாட்செய்தவை*
*மண்ணில் பிறந்தார்க்கு வைத்த பொருள் - எண்ணுங்கால்*
*ஈதொழிய வேறில்லை எச்சமயத்தோர் சொல்லும்*
*தீதொழிய நன்மை செயல்*

அதாவது, ஒரு மனிதனின் வாழ்க்கை முடிந்து மரணத்தை அடையும் பொழுது, அதுநாள்வரை இவ்வுலகில் அவன் தேடிய பொருள் எதுவென்று கேட்பின், அவன் செய்த புண்ணியமும், அவன் செய்த பாவங்களும் தான். அவன் தன்னோடு எடுத்துச் செல்லும் பொருளே உண்மையில் இவ்வுலகில் அவன் தேடிய பொருள் என்றும், அவை அவன் செய்த புண்ணியமும், பாவமும்தான் என்றும் ஔவை சொல்கின்றார். ஆராய்ந்து பார்க்கின், எல்லா மதத்தினரும் சொல்வது இதுவன்றி வேறில்லை. ஆகவே, பாவங்கள் செய்யாமல் புண்ணியம் செய்து வாழ வேண்டுமென்று ஔவை சொல்கின்றார்.

ஆகவே, ஔவை சொன்னது போல், நாம் அறநெறி அறிந்து, நல்வழி நடந்து, நற்செயல்கள் செய்து வாழ்ந்தோமென்றால் உடலை விட்டு உயிர் பிரிந்தபின், புண்ணியம் என்னும் சொத்தை எடுத்துக் கொண்டு நல்ல பிறப்பிற்குப் போகலாம்.

அறத்தை மறந்து, பழி பாவங்களுக்கு அஞ்சாமல் குற்றங்கள் செய்து வாழ்ந்தோமென்றால், உடலை விட்டு உயிர் பிரிந்தபின் பாவம் எனும் சொத்தை எடுத்துக் கொண்டு துன்பப் பிறப்பிற்குத்தான் போக வேண்டும்.

புத்தரும் இதனைத்தான் இவ்வாறு சொல்கின்றார்.

> *மனிதர்கள் அவர்களின் செயல்களுக்கு அவர்களே வாரிசு. அவர்களின் செயல்களே அவர்களின் பிறப்பை நிர்ணயக்கும்; அவர்களின் செயல்களே அவர்களின் உறவினர். அவர்களின் செயல்கள் வீடு நோக்கி வரும்.; தீய செயலாயினும், நல்ல செயலாயினும் அதற்கு அவரவர்களே பொறுப்பு*

ஔவை, இவ்வுலகில் நாம் தேடிய சொத்து நாம் செய்த பாவங்களும் புண்ணியங்களும்தான் என்கிறார். பகவான் புத்தரும் ஒவ்வொரு மனிதரும் அவர் செயலுக்கு அவரே வாரிசு என்கிறார். நாம் அறத்தை மறந்து பழி பாவங்களுக்கு அஞ்சாமல் தீய செயல்கள் செய்தால், பாவம் என்னும் சொத்தைத் தேடிக் கொள்கிறோம். நாம் அறம் அறிந்து நல்வழி நடந்து நற்செயல்கள் செய்தால் புண்ணியம் என்னும் சொத்தை தேடிக் கொள்கிறோம். ஆகவே, இவ்வுலகில் நாம் தேடிய சொத்து நாம் செய்த தீய செயல்களும், நாம் செய்த நற்செய்ல்களும் தான். இதைத்தான் பகவான் புத்தர் அவரவர் செயலுக்கு அவரவரே வாரிசு என்கிறார்.

அடுத்து, அவர்களின் செயல்களே அவர்களின் பிறப்பை நிர்ணயிக்கும் என்கிறார் பகவான் புத்தர். உடலைவிட்டு உயிர் பிரிந்தபின், அவரவர் செய்த செயல்கள் தான் அவரவருக்கு எவ்வாறு அடுத்த உலகில் பிறப்பு அமையும் என்பதை நிர்ணயிக்குமாம். அறத்தை மறந்து, பழி பாவங்களுக்கு அஞ்சாமல், குற்றங்கள் செய்து வாழ்ந்த ஒருவனுக்கு, உடலைவிட்டு உயிர் பிரிந்தபின், அடுத்த உலகில் துன்பப் பிறப்பு அமையும். எந்த மாதிரி துன்பப் பிறப்பு அமையும்?' நரகத்திலோ, பேயாகவோ, மிருகமாகவோ பிறப்பு அமையும். ஏன் அந்த பிறப்பு அமைந்தது? அவன் செய்த பாவச் செயல்கள்தான் அப்பிறப்பை அமைத்தது.

அடுத்து, அவர்களின் செயல்களே அவர்களின் உறவினர் என்கிறார் பகவான் புத்தர். நமக்கு நன்மைகள் வந்தபோதும், துன்பங்கள் வந்தபோதும், நம்மைவிட்டு பிரியாமல், நம்மோடு இருக்கக் கூடியவர்கள் உறவினர்கள். உறவினர்களையும் மரணம் நம்மிடமிருந்து பிரித்துவிடும். இவ்வுலகில் வாழும்வரைதான் அவர்கள் நமக்கு உறவினர்கள். ஆனால் மனிதன் செய்த செயலோ, இங்கும் அவர்களை நிழல்போல தொடர்ந்து வந்து, உடலைவிட்டு உயிர் பிரிந்த பின்னும் அடுத்த உலகத்திற்குக் கூட வருமாம். அதாவது, இங்கும் அவர்கள் செய்த நற்செயல்களும், தீய செயல்களும் அவர்கள் பின்னாலேயே தொடர்ந்து வந்து, உடலைவிட்டு உயிர் பிரிந்தபின்னும் அடுத்த உலகத்திற்கும் தொடர்ந்து வரும். ஆகவே, இறந்தும் கூட வரக்கூடிய செயல்களே

மனிதர்களின் உண்மையான உறவினர் என்று பகவான் புத்தர் சொல்கின்றார். ஆக, பாவங்கள் செய்து வாழும் ஒரு மனிதனின் உறவினர் யார்? பாவங்களே!

அடுத்து, செயல்கள் வீடு நோக்கி வரும் என்கிறார் பகவான் புத்தர். அதாவது, மனிதர்கள் செய்த செயல்கள், அவரவரையே மீண்டும் நாடி வருமாம். காலையில் கூட்டைவிட்டு பறந்து சென்ற பறவை, மாலையில் கூட்டைநோக்கி பறந்து வரவதுபோல், அவரவர் செய்த செயல்கள் மீண்டும் அவரவரையே நாடி வரும். இப்பிறப்பிலோ, அல்லது அடுத்த பிறப்பிலோ, அவரவர் செய்த புண்ணியமும், அவரவர் செய்த பாவமும் அவரவரையே நாடி வரும். ஆகவே, பாவங்கள் செய்தவன், அவன் செய்த பாவங்கள், இப்பிறப்பிலோ அல்லது, அடுத்த பிறப்பிலோ அவனிடமே திரும்பி வரும்போது, தான் செய்த பாவங்களைப் பார்த்து, "பாவங்கள் செய்தேனே" என்று புலம்பி வருந்துவான்.

அடுத்து, நற்செயலாயினும், தீய செயலாயினும், அதற்கு அவரவரே பொறுப்பு என்கிறார் பகவான் புத்தர். அதாவது, ஒவ்வொருவரும், அவரவர் செய்த தீய செயல்களுக்கும் அவரவர் செய்த நற்செயல்களுக்கும், அவரவரே பொறுப்பு. நாம் பாவங்கள் செய்தோமென்றால், அந்த பாவத்திற்கு நாம்தான் பொறுப்பு. அதில் வேறு யாருக்கும் பங்கில்லையாம். ஆகவே, மனைவிக்காகவும் சரி, பிள்ளைகளுக்காகவும் சரி, நண்பர்களுக்காகவும் சரி தீயவை செய்யக்கூடாது. யாராலும் செயற்பலனிலிருந்தும், வினைப்பயனிலிருந்தும் தப்ப முடியாது. எப்பொழுது, செயல்கள் பழுத்து, அதனுடைய பயனை அனுபவிக்கக் கூடிய காலம் வருகின்றதோ, அப்பொழுது அதனை அனுபவிக்கத்தான் வேண்டும். ஆகவே, பாவங்கள் செய்தோர் அவரவர் பாவ செயல்கள் பழுக்கும் பொழுது துன்புற்று புலம்பி வருந்துவர்.

பாவங்கள் செய்தால் துன்பங்கள் வரும் என்ற உண்மையை அறிந்து, பாவங்கள் செய்யாமல், நல்வழி நடந்து, நற்செயல்கள் செய்து வாழ்ந்தோமென்றால், இரண்டு உலகிலும் நமக்கு நன்மைகள் வரும்.

நாம் ஒவ்வொருவரும், நம்மிடம் குற்றங்கள் உள்ளனவா என்று நம்மையே, நாம் அடிக்கடி ஆராய்ந்து பார்க்க வேண்டும். குற்றங்கள் கண்டோமென்றால் உடனே அக்குற்றங்களை நம்மிடமிருந்து நீக்கிவிட வேண்டும். இல்லையேல், பழி, பாவங்களுக்கு அஞ்சாமல், குற்றம் செய்பவன் வாழ்வு, அவன் செய்யும் குற்றங்களாளேயே அழியும். இதனைத்தான் பகவான் புத்தர் இவ்வாறு கூறுகின்றார்.

*"உங்களிடம் குற்றங்கள் இருக்கின்றதாவென்று ஆராய்ந்து பாருங்கள். உங்களிடம் குற்றங்கள் உண்டென்றால்,*

*அவற்றை உடனே நீக்கி விடுங்கள். குற்றங்களின் பிற்பயன் துன்பம். ஒரு மனிதன் தன் தலையில் அணிந்திருக்கும் தலைப்பாகை தீ பிடித்துக் கொள்ளுமாயின் தன் முழு கவனத்தையும் செலுத்தி அத்தீயை அணைப்பது போல், உங்களிடம் குற்றங்கள் கண்டீர்களானால், உடனே அக்குற்றங்களை நீக்கி விடுங்கள். குற்றங்கள் பல செய்து, பழிக்கும் பாவங்களுக்கும் அஞ்சாமல் வாழ்பவன் வாழ்வு, அவன் செய்யும் குற்றங்களாலேயே அழியும்"*

நாம் நம் செயல்களுக்கு வாரிசாகையால், செயல்களுக்குப் பிற்பயன் இருப்பதால், நாம் ஒரு செயலைச் செய்யுமுன், அச்செயலின் பிற்பயனை ஆராய்ந்து பார்க்க வேண்டும். அது தீய செயலா என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். அது பாவச் செயலா என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். அச்செயலைச் செய்வதால் நமக்கோ அல்லது பிறருக்கோ துன்பம் வருமா என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். அச் செயலால் நமக்கோ அல்லது இன்னொருவருக்கோ துன்பம் வருமாயின் அச்செயலைச் செய்யக்கூடாது. ஏன்? அச்செயல் பின்னால் துன்பம் தரும். அப்போது ' பாவங்கள் செய்தேனே!" என அதை நினைத்து மனம் வருந்தும். இதனைத்தான் பகவான் புத்தர் இவ்வாறு சொல்கின்றார்.

*எந்த ஒரு செயல், செய்தபின் அதை நினைத்து மனம் வருந்துமோ! எதன் பிற்பயனை அழுது கொண்டே அனுபவிக்க வேண்டியிருக்குமோ, அது நற்செயல் இல்லை.*

பழி, பாவங்களுக்கு அஞ்சாமல், குற்றங்கள் செய்வோர், இங்கும் துன்பப்படுவார்கள், அடுத்த உலகிலும் துன்பப்படுவார்கள் என்று பகவான் புத்தர் சொல்கின்றார்.

*இங்கும் துன்பப் படுவான்; அடுத்த உலகிலும் துன்பப்படுவான். பாவங்கள் செய்தவன் இரண்டு உலகிலும் துன்பப்படுவான். "பாவங்கள் செய்தேனே" என வருந்துவான்*

நான் எனும் அகந்தையில் சிலர் தொடர்ந்து தீயச் செயல்களைச் செய்வார்கள். தீய செயல்களை வழக்கமாகச் செய்து பழகிய இவர்கள், தீய செயல்களைக் கண்டு அஞ்சுவதில்லை. வெட்கமில்லாமல், பழி பாவங்களுக்கு அஞ்சாமல் தொடர்ந்து தீய செயல்களைச் செய்வோரைத் திருவள்ளுவர் தீயோர் என்று சொல்கின்றார்.

*தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்*
*தீவினை என்னும் செருக்கு.*

அதாவது, தன் நலனைப் பெரிதென மதித்து, பழி பாவங்களுக்கு அஞ்சாமல், தீயவற்றையே செய்து பழகியோர், தீயச் செயல்களைக் கண்டு அஞ்சுவதில்லை. நற்செயல்கள் செய்து பழகிய நல்லோரே பழி பாவங்களுக்கு அஞ்சி, பிறருக்குத் தீமை செய்ய அஞ்சுவர் என்று திருவள்ளுவர் சொல்கின்றார்.

தீயவற்றைக் கண்டு அஞ்சாமல், தீய செயல்களின் பிற்பயன் துன்பம் என்பதையும் சிந்திக்காமல், பழி பாவங்களுக்கு அஞ்சாமல், தன் நலனைப் பெரிதென மதித்து மற்றவர்களுக்குத் தீங்கு செய்யும் தீயோருக்கு, தீயவை தேன் போல் இனிக்குமாம். தீய செயல்கள் பழுத்து பயனளிக்காத வரையில் தீயோருக்குத் தீய செயல்கள் இன்பமாகத்தான் இருக்கும். ஆனால் இவன் செய்த பாவச் செயல்கள் பழுத்து பலனளிக்கையில், அழுது, புலம்பி, வருந்துவான் என்று பகவான் புத்தர் சொல்கின்றார்.

*"பாவச் செயல்கள் பழுத்து பலனளிக்காத வரையில், மூடன் அதைத் தேன் என்று விரும்புகிறான். ஆனால் அது பழுத்து பயனளிக்கையில், அவன் துன்புற்று வருந்துவான்"*

நல்லார் தீயவற்றைத் தீயினும் கொடியதாகக் கருதி அஞ்சுவார்கள்; ஆனால், தீயோருக்கோ தீயவை தேன் போல் இனிக்குமாம். தீய செயல்களினால் வரும், தவறான லாபம், பொருள், இன்பம், இவர்களுக்குத் தேன் போல் இனிக்கும். இவர்கள் பிற்பயன் துன்பம் வருமே என்று சிந்திப்பதும் இல்லை., மற்றவர்களுக்குத் துன்பம் வருமே என்று வருந்துவதுமில்லை. அப்பொழுது வரும் தவறான லாபத்தையும், இன்பத்தையும் பெரிதெனக் கருதி, பழி பாவங்களுக்கு அஞ்சாமல், மீண்டும் மீண்டும் பாவச் செயல்களைச் செய்வார்கள்.

தீய செயல்களோ உடனே பழுப்பதில்லை; அதாவது, தீய செயல்கள் உடனே பிற்பயனைத் தருவதில்லை. எப்படி புதிதாகக் கறந்த பால் உடனே புளிப்பதில்லையோ, அது போல் தீய செயல்கள் உடனே பழுப்பதில்லை. தீய செயல்கள் பழுத்து பலனளிக்காத வரை, தீயோருக்கும் அதனால் நன்மை வரும்போல் தோன்றும் என்று பகவான் புத்தர் சொல்கின்றார்.

*“பாவம் பலனளிக்க ஆரம்பிக்காதவரை இன்பமாய்த்தான் தோன்றும்; ஆனால் பாவச் செயல்கள் பழுத்து பலனைக் கொடுக்கும் போது, பாவி தன் பாவத்தை உணர்கிறான்.'*

பிற்பயன் இருக்கின்றது என்று கொஞ்சமும் அஞ்சாமல், தீய செயல்களினால் வரும் தவறான லாபத்தையும், இன்பத்தையும், நாடி, ஓடி ஓடி பாவங்கள் செய்வான் மடையன். இவன் பாவங்களோ கொஞ்சம் கொஞ்சமாகச் சேரும். எப்படிச் சேரும்? நாம் ஒரு குடத்தைப் குழாயின் அடியில் வைத்து தண்ணீர் சொட்டுச் சொட்டாக விழுமாறு திறந்து விடுவோமென்றால், குடம் உடனே நிறைவதில்லை. ஏன்? தண்ணீர் சொட்டுச் சொட்டாக விழுகிறது. தண்ணீர் சொட்டுச் சொட்டாக விழுந்த போதிலும், காலத்தில் குடம் நிறையும். அதுபோல், மடையன் கொஞ்சம் கொஞ்சமாக பாவங்கள் செய்து பாவத்தில் நிரம்பி விடுவான் என்று பகவான் புத்தர் சொல்கின்றார்.

***"என் பக்கம் அண்டாது" என்று பாவத்தை இலேசாக எண்ண வேண்டாம். துளித்துளியாக விழும் தண்ணீராலேயே குடம் நிரம்பிவிடும். பேதை கொஞ்சம் கொஞ்சமாகப் பாவத்தைச் சேர்த்தாலும், அவன் பாவத்தால் நிரம்பி விடுகிறான்.***

குடம் நிறைவதற்குக் காலம் எடுப்பதுபோல், மடையன் செய்யும் பாவங்கள் பழுப்பதற்கு காலம் எடுக்கும். பாவச் செயல்கள் பழுக்காதவரை, தீயோருக்குச் தீயச் செயல்களால் நன்மைகள் வருவதுபோல் தோன்றும். இவனுக்குப் பொருளும், லாபமும், இன்பமும் வரும். தீயோருக்கு வரும் நன்மைகளையும் பார்த்து சிலர், இவனோ பாவங்கள் செய்கிறான். இவனுக்குச் செல்வமும், சுகமும் வருகின்றதே" என்று அறத்தைச் சந்தேகப் படுவார்கள். ஆனால் குடம் நிறைவதுபோல், இவன் பாவங்கள் ஒருநாள் பழுக்கும். இவன் பாவங்கள் இவனைச் சூழ்ந்து கொள்ளும். அன்று, இவன் "பாவங்கள் செய்தேனே' என்று தான் செய்த பாவங்களைப் பார்த்து அழுது புலம்பி துன்பப்படுவான். பாவத்தின் பிடியிலிருந்து தப்பவே முடியாது என்று பகவான் புத்தர் சொல்கின்றார்.

***“மனிதன் தன் பாவக் கருமத்தின் பிடியிலிருந்து தப்பவே முடியாது; தப்பித்துக் கொள்ளும் இடம் பரந்த வானிலும் இல்லை, ஆழ்ந்த கடலிலும் இல்லை; மலையின் குகைகளிலும் இல்லை."***

பாவங்கள் செய்பவன் வாழ்வு அவன் செய்யும் பாவங்களாலேயே அழியும் என்று திருவள்ளுவரும் சொல்கின்றார்.

**தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை**
**வீயாது அடி உறைந் தற்று.**

அதாவது, எப்படி நிழல் நம் பாதத்திலிருந்து பிரிவதில்லையோ, போகுமிடமெல்லாம் பாதத்தோடு இணைந்து கூடவே

வருகின்றதோ அது போல், தீமைகள் செய்பவனை அவன் பாவங்கள் நிழல் போல் தொடர்ந்து வந்து அவனை அழிக்கும்.

ஆகவே, தீயச் செயல்கள் செய்பவனுக்குப் பகை வேறு இல்லை. அவனே அவனுக்குப் பகைவன். அவன் செய்யும் தீயச் செயல்களே அவனுக்குப் பகைவன். அவன்தான் செய்யும் பாவங்களாலேயே அழிவான். எப்படி அழிவான்?

பகவான் புத்தர் வாழ்ந்த காலத்தில் இந்தியாவில் ராஜகிரகம் என்று ஒரு பட்டணம் இருந்தது. அப்பட்டணத்தில் குண்டன் என்ற ஒரு பன்றி இறைச்சி வியாபாரி வாழ்ந்தான். குண்டன் பன்றிகளைக் கொன்று, அதன் இறைச்சியை வியாபாரம் செய்வான். இவன் கிராமங்களுக்குப் போய் பன்றிகளை மிகவும் குறைந்த விலைக்கு வாங்கி வந்து தன் வீட்டிற்குப் பின்னால் வேலி அமைத்து, அதற்குள் பன்றிகளை வளர்த்து வந்தான். இவன் அன்றாடம் ஒரு பன்றியைக் கொன்று இறைச்சியை விற்பனைச் செய்வான்.

ஆனால், குண்டன் பன்றிகளை மிகவும் கொடூரமாகக் கொல்வான். எப்படிக் கொல்வான்? பன்றியை முதலில் ஒரு தூணோடு சேர்த்து உறுதியாகக் கயிற்றினால் கட்டுவான். பிறகு ஒரு தட்டையான தடியால் அதன் உடல் வீங்கும்வரை அடிப்பான். அதன் இறைச்சியை மென்மையாக்குவதற்காக தடியால் உடல் வீங்கும்வரை அடிப்பான். பன்றியோ வலி தாங்க முடியாமல் வீறிட்டுக் கத்தும்.

பிறகு அதன் வாயைத் திறந்து வாய்க்கு இடையில் ஒரு கட்டையை வைப்பான்; வாய் மீண்டும் மூடாமலிருக்க இவ்வாறு செய்வான். பின்னர், ஒரு பானையில் நீரைக் கொதிக்க வைத்து, கொதிக்கும் நீரை அப்பன்றியின் வாயில் ஊற்றுவான். அதன் குடலில் இருக்கும் மலம் எல்லாம் வெளியாகும்வரை அதன் வாயில் கொதிக்கும் நீரை ஊற்றுவான். பன்றியோ வலி தாங்க முடியாமல், துன்பம் தாங்க முடியாமல் துடிக்குமாம். ஆனால் குண்டனின் மனதிலோ கொஞ்சமும் இரக்கம் தோன்றாது. பாவச்செயல்களையே செய்து பழகிய குண்டன், பாவத்தைக் கண்டு அஞ்சுவதில்லை.

அதன் குடலிலிருந்த மலம் எல்லாம் வெளியானதும் ஒரு தீப்பந்தத்தால் அதன் உடல் மீதுள்ள உரோமத்தை கருக்குவான். உரோமங்களைக் கருக்கியப்பின், கொதிக்கும் நீரை அதன் மேல் ஊற்றி, அதன் உடலில் இருக்கும் அழுக்கைச் சுரண்டி எடுப்பான். பிறகு அதன் கழுத்தை அறுத்து, இரத்தத்தை ஒரு பாத்திரத்தில் பிடிப்பான். பின்னர் அதன் உடலை வெட்டி, தனக்கும் கொஞ்சம் மாமிசத்தை எடுத்துக் கொண்டு, மீதமுள்ளவற்றை வியாபாரம் செய்வான்.

தன் மனைவியிடம் அந்த இறைச்சியையும், இரத்தத்தையும் சமைக்கும்படி கூறிவிட்டு, வியாபாரம் செய்யச் சென்று, திரும்பியவுடன் அவற்றைச் சாப்பிடுவான்.

இவ்வாறு, குண்டன் நாற்பது ஆண்டுகள் பன்றிகளைச் சித்திரவதை செய்து கொன்று வந்தான். பகவான் புத்தர் அருகில் இருந்த போதும் அவன் ஒருநாள் கூட புத்தரிடம் போய் தர்ம உபதேசம் கேட்டதில்லை. இவன், அடுத்த உலகம் இல்லை, தீவினை இல்லை, செயல்களுக்குப் பிற்பயன் இல்லை என்று இகழ்ந்து பேசுவான். பகவான் புத்தரிடம் போய் தர்ம உபதேசம் கேட்போரையும் இவன் இகழ்வான். இவன் திருந்தி வாழ்வதற்கு வாய்ப்பு கிடைத்தும், பகவான் புத்தர் அருகாமையில் இருந்தும், குண்டன் அந்த வாய்ப்பைப் பயன் படுத்திக் கொள்ளவில்லை.

இவன் செய்த பாவங்கள், ஒரு நாள் பழுத்து விட்டன. ஓர் இரவு, தூங்கிக் கொண்டு இருந்தவன் அலறிக் கொண்டு எழுந்தான். விபரிக்க முடியாத பயமும், பீதியும், அவனை ஆட்கொண்டன. எப்படி அவன் கொல்லும்பொழுது பன்றிகள் எப்படி கத்தினவோ, அதுபோல் குண்டன் இப்போது கத்தினான். அதாவது, நாற்பது ஆண்டுகள் குண்டன் செய்த பாவச் செயல்கள் இப்போது பழுத்து விட்டன. இவன் மண்டியிட்டு, கைகளாலும், கால்களாலும் தவழ்ந்து, கொல்லும் பொழுது அந்தப் பன்றிகள் எப்படிக் கத்தினவோ அதுபோல் கத்திக் கொண்டு இங்கும் அங்கும் வீட்டிற்குள் ஓடினான்.

மனைவி பிள்ளைகளுக்கெல்லாம் ஒரே பீதி. என்ன காரணம் என்று விளங்கவில்லை. அண்டை வீட்டுக்காரர்களுக்கெல்லாம் ஒரே பயம். சிலர் குண்டனைப் பிடித்து, கைகளையும் கால்களையும் கயிற்றால் கட்டி, வாயில் துணி வைத்து அடைத்தார்கள்.

ஆனால், வினைப்பயன் பழுக்கும்போது, அதை எவராலும் தடுக்க முடியாதாம். என்னதான் கயிற்றால் கையையும், காலையும் கட்டினாலும், குண்டன் கயிற்றை அறுத்துக் கொண்டு ஓடினான். வாயில் எப்படித்தான் துணியை வைத்து அடைத்தபோதும். குண்டன் துணியைக் கக்கிவிட்டு பன்றியைப் போல் கத்தினான். இரவிலும் பகலிலும் பன்றியைப்போல் கத்திக் கொண்டு ஓடிய குண்டன், ஒரு வாரம் துன்பப்பட்டு இறந்து விட்டான்.

அவ்வழியே சென்ற பகவான் புத்தரின் சிஷயர்கள் புத்தரிடம் போய் இவ்விபரத்தைக் கூறினார்கள். அப்போது பகவான் புத்தர் அவர்களிடம், குண்டன் நாற்பது ஆண்டுகள் பாவங்கள் செய்து வாழ்ந்தான். அவன் செய்த பாவங்கள் இங்கேயே பழுத்துவிட்டன. ஒருவாரம் அவன் இங்குத் துன்பப்பட்டான். இறந்து இப்போது நரகத்தில் பிறந்து விட்டான். அவன் செய்த பாவங்களுக்காக அவன் பல ஆயிரம் ஆண்டுகள் நரகத்தில் துன்பப்படுவான்,"

என்று கூறி அவர்களுக்கு இவ்வாறு உபதேசம் செய்தார்.

> *"தீய செயல்களைச் செய்தவன் இங்கும் வருந்துகிறான், அடுத்த உலகிலும் வருந்துகிறான்; இரண்டு உலகிலும் அவனுக்குத் துயரமே. தான் செய்த பாவங்களின் விளைவைக் கண்டு அவன் வருந்தி புலம்புகிறான்."*

திருவள்ளுவரும் இதனைத்தான் இவ்வாறு சொல்கிறார்.

> *எனைப்பகை உற்றாறாரும் உய்வர்; வினைப்பகை*
> *வீயாது பின்சென்று அடும்.*

அதாவது, இங்கு மனிதர்களை நாம் பகைத்துக் கொண்டால் அந்தப் பகையிலிருந்து எப்படியாவது தப்பித்து வாழ்ந்து விடலாம். அறிவு பலத்தாலோ, பொருள் பலத்தாலோ, ஆள் பலத்தாலோ, எப்படியாவது நாம் நம் பகைவர்களிடமிருந்து தப்பித்துக் கொள்ளலாம். ஆனால், எவராலும் தான் செய்த பாவங்களிடமிருந்து தப்ப முடியாது. பாவம் எனும் பகைவனிடமிருந்து யாரும் தப்ப முடியாது. அது ஒருவனைத் துரத்திச் சென்று அழிக்கும். பாவம் எனும் பகைவனிடமிருந்து உடல் பலத்தாலும் தப்ப முடியாது. பண பலத்தாலும் தப்ப முடியாது, ஆள் பலத்தாலும் தப்ப முடியாது. பாவங்கள் செய்தவனை, அவன் செய்த பாவங்கள் அவனைத் துரத்திச் சென்று அழிக்கும் என்று திருவள்ளுவர் செல்கின்றார்.

பாவங்கள் செய்தவன், அவன் செய்த பாவங்கள் பழுக்கும் போது, அதன் பிடியிலிருந்து தப்ப முடியாது. அதன் பிடியிலிருந்து தப்பி ஓடுவதற்கு இவ்வுலகில் எங்கும் இடமில்லை என்று பகவான் புத்தரும் சொல்கின்றார்.

> **'மனிதன் தன் பாவகருமத்தின் பிடியிலிருந்து தப்பவே முடியாது; தப்பித்துக் கொள்ளும் இடம் பரந்த வானிலும் இல்லை, ஆழ்ந்த கடலிலும் இல்லை, மலையின் குகைகளிலும் இல்லை!"**

பழி பாவங்களுக்கு அஞ்சாமல், தீயச் செயல்கள் செய்யும் தீயோருக்கு ஐந்து இழப்புகள் வரும் என்று பகவான் புத்தர் சொல்கின்றார்.

## 1. *புகழ் இழப்பார்*

தீய செயல்கள் செய்து வாழ்பவர் புகழ் இழந்து வருந்துவார். பழி பாவங்களுக்கு அஞ்சாமல், நான் எனும் அகந்தையில், தன் நலனைப்

பெரிதென மதித்து, பிறருக்குக் கேடு செய்பவரை எல்லாரும் தூற்றுவார்கள். அவர் நட்பை நல்லோர் விரும்புவதில்லை. அவரைப்போல் தீயோரே அவர் நட்பை விரும்புவார்கள்.

சிலர், தன் தீய செயல்களை மிகவும் கெட்டிக்காரத்தனமாக மறைத்து, நல்லவர்போல் வாழ்வார்கள். பாவச் செயல்களிலிருந்து எவரும் தப்ப முடியாததால், அவர் செய்த பாவங்கள் ஒருநாள் எல்லாருக்கும் தெரிய வரும். அவர் செய்த பாவங்களை அறிந்து மக்கள் அவரை தூற்றுவார்கள் . ' நாம் அவரை நல்லவர் என்று எண்ணியிருந்தோமே! அவர் பாவங்கள் செய்து மறைந்து வாழ்ந்திருக்கிறாரே. அவர் கொடியவர்" என்று மக்கள் அவரைத் தூற்றுவார்கள்.

அவர் குற்றங்களைக் கண்டுபிடித்து, சட்ட காப்பார்கள் அவரை விசாரித்துத் தண்டிப்பார்கள். அன்று அவர் புகழ் இழந்து, தூற்றப்பட்டு, அவமானப்பட்டு வருந்துவார். 'அறிவிழந்து, அகந்தையில் பாவங்கள் செய்தேனே! இன்று, புகழ் இழந்து, அவமானப்பட வேண்டியதாயிற்றே' என்று தான் செய்த பாவங்களை எண்ணி, புலம்பி வருந்துவார். ஆகவே, பழி பாவங்களுக்கு அஞ்சாமல், தீய செயல்கள் செய்வோர், புகழ் இழப்பார்கள்.

## *2. பொருள் இழப்பார்*

தீய வழியில் தேடிய பொருள் தங்காது. தீயோருக்குத் தவறான வழியில் வரும் பொருளும், லாபமும் தேன் போல் இனிக்கும். அவர்களின் தீயச் செயல்கள் பழுக்காதவரை, அவர்களுக்கு பொருளும், இன்பமும் வருவதுபோல் தோன்றும். ஆனால் அவர்களின் பாவச் செயல்கள் பழுக்கும்போது, பொருளை இழந்து துன்பப்படுவார்கள். பிறரைத் துன்புறுத்தி, பிறர் அழ அழ தேடிய பொருள், வளர்வதுபோல் தோன்றினாலும், காலத்தில் இவர் அழ அழ, இவர் கைவிட்டுப் போய்விடும் என்று திருவள்ளுவர் சொல்கின்றார்.

***அழக்கொண்ட எல்லாம் அழப்போம்; இழப்பினும்***
***பின் பயக்கும் நற்பா லவை.***

அதாவது, பிறரை வறுத்தி, பிறர் அழ அழ தேடிய பொருள், நீ அழ அழ உன் கையைவிட்டு போகும். ஆனால், நல்வழியில் தேடிய பொருள், ஆரம்பத்தில் குறைந்தாலும், பின்னால் வளர்ந்து பல நன்மைகளைத் தரும்.

தொடர்ந்து திருவள்ளுவர், பாவங்கள் செய்து தேடிய பொருளைக் காக்க முடியாது என்கிறார்.

***சலத்தால் பொருள் செய்தே மார்த்தல் பசுமட்***
***கலத்துள் நீர் பொய்தா இயற்று.***

அதாவது, தீய வழிகளில் தேடிய பொருளைக் காத்து வைப்பது, ஈர மண்ணில் பானை செய்து அதில் நீரை ஊற்றி காப்பது போலாகும். மண்ணோ ஈர மண். அதில் நீரை ஊற்றி காப்பது என்பது முடியுமா? முடியாது. அதுபோல் தவறான வகையில் தேடிய பொருளைக் காக்க முடியாது என்று திருவள்ளுவர் சொல்கின்றார்.

பாவங்கள் செய்து தேடிய பொருள், இவர்கள் செய்த பாவங்கள் பழுக்கும் பொழுது, இவர்களிடமிருந்து போய்விடும். நெருப்பாலும், வெள்ளத்தாலும் பொருளை இழப்பார்கள்; பெரும் நஷ்டத்தால் பொருளை இழப்பார்கள்; தண்டனையால் பொருளை இழப்பார்கள், பெரும் பிணியால் பொருளை இழப்பார்கள்; பகைமையால் பொருளை இழப்பார்கள். மற்றும் வேறு வகையில் பொருளை இழப்பார்கள். அன்று அவர்கள் பொருள் போகின்றதே என்று கண்ணீர் விட்டு புலம்புவார்கள். அவர்கள் என்னதான் முயன்றாலும் அப்பொருளைக் காக்க முடியாது. ஆகவே, தீய வழியில் தேடிய பொருள், அவர்கள் அழ அழ அவர்களை விட்டுப் போகும்.

## *3. பாவங்கள் செய்தவரை அச்சம் வருத்தும்*

பாவங்கள் செய்தவர் மனதில் அச்சம் இருக்கும். தன் குற்றங்கள் பிறருக்குத் தெரியுமோ என்ற அச்சம் அவர் உள்ளத்தை வருத்தும். எங்கெல்லாம் மக்கள் கூடுகிறார்களோ, அங்கெல்லாம் அவர் சென்றால், அவர் மனதில் அச்சம் எழும். அங்கு சிலர் கூடி பேசினால் அதைக் கண்டு அவர் மனதில் அச்சம் எழும். என் குற்றங்களைப் பற்றி பேசுகிறார்களோ, அவர்களுக்கு என் குற்றங்கள் தெரியுமோ' என்ற அச்சம் அவர் மனதில் எழும்.

அடுத்து, குற்றங்கள் செய்த ஒருவரை அதிகாரிகள் பிடித்து, விசாரித்துத் தண்டனை வழங்குவதைப் பார்க்கும்போது, அவர் மனதில் அச்சம் எழும். "எந்தக் குற்றங்களுக்காக அதிகாரிகள் இவனைத் தண்டித்தார்களோ அந்தக் குற்றங்கள் என்னிடமும் உள்ளதே! என் குற்றங்கள் அதிகாரிகளுக்குத் தெரிந்தால் என்னையும் தண்டிப்பார்களே, என்ற அச்சம் அவரை வருத்தும்.

அடுத்து, அவர் செய்த பாவங்கள் அவர் மனதை வருத்தும். அவருக்கு வியாதியும், முதுமையும் வரும்பொழுது, தான் செய்த பாவங்களை நினைத்து அஞ்சி வருந்துவார். " ஐயோ! நான் பலருக்குப் பல கேடுகள் செய்துள்ளேனே! பலரை வஞ்சித்துள்ளேனே! பலருக்குத் துரோகம் செய்துள்ளேனே! பல பாவங்கள் செய்துள்ளேனே! அடுத்த உலகம் உண்டு என்று பெரியோர்கள் சொல்கின்றார்களே! அடுத்த உலகத்தில் என் கதி என்ன? என்ற அச்சம் அவரை வருத்தும்.

ஆகவே, பாவங்கள் செய்தவரை அச்சம் வருத்தும்.

## 4. பயந்து குழப்பத்தோடு இறப்பார்

பழி பாவங்களுக்கு அஞ்சாமல், தன் நலனைப் பெரிதென மதித்து, அகந்தையில் பிறருக்குக் கேடுகள் செய்தவருக்கு மரணம் வரும்பொழுது, அவர் மனம் அவர் செய்த பாவங்களை அவரிடம் எடுத்துக் காட்டும். அதைக் கண்டு, பயத்தால் உள்ளம் நடுங்கி குழப்பத்தோடு இறப்பார்.

அவருக்கு மரணம் வரும்பொழுது, அவர் பாவங்கள் செய்து தேடிய பொருள் யாவும் அவர் உதவிக்கு வராது. ஆனால் அவர் செய்த பாவங்களோ அவர்முன் வந்து நிற்கும். எதற்காக அவர் இரவெல்லாம் திட்டமிட்டு, பகலெல்லாம் ஓடி, பலரை வஞ்சித்து, பாவங்கள் செய்து பொருள் தேடினாரோ அவையெல்லாம் இப்போது அவருக்கு உதவிக்கு வராது. கட்டிய மனைவியும் கண்ணீர் விட்டுத்தான் நிற்பாள். பிள்ளைகளும் கண்ணீர் விட்டுத்தான் நிற்பார்கள். நண்பர்களும், உறவினர்களும் வருந்தி கைக்கட்டி செய்வதறியாமல் நிற்பார்கள். மருத்துவரும் கைவிட்டு விடுவார். அவர் செய்த பாவங்கள் இப்போது அவர்முன் வந்து நிற்கும். அதைப் பார்த்து, பயத்தால் உள்ளம் நடுங்கி. குழப்பத்தோடு இறப்பார்.

## 5. அடுத்த உலகில் துன்பப் பிறப்பிற்குப் போவார்

பழி பாவங்களுக்கு அஞ்சாமல் பாவங்கள் செய்தவர் அடுத்த உலகத்திற்குத் தேடிய பொருள் பாவங்கள்தான். உடலை விட்டு உயிர் பிரிந்தபின், அவரோடு வரக்கூடிய பொருள் பாவமாதலால், உடலை விட்டு உயிர் பிரிந்தபின், நரகத்திலோ, பேயாகவோ, மிருகமாகவோ பிறந்து துன்பப்படுவார். என்று பகவான் புத்தர் சொல்கின்றார்.

ஆகவே, பழி பாவங்களுக்கு அஞ்சாமல், தன் நலனைப் பெரிதெனக் கருதி, நான் எனும் அகந்தையில் பிறருக்கு கேடுகள் செய்பவருக்கு இந்த ஐந்து துன்பங்களும் வரும் என்று பகவான் புத்தர் சொல்கின்றார்.

பாவச் செயல்கள் இங்கும் அடுத்த உலகிலும் துன்பம் தருவதால், பாவங்கள் செய்தோர். தொடர்ந்து மீண்டும் மீண்டும் பாவங்கள் செய்யக்கூடாதென்று பகவான் புத்தர் சொல்கின்றார்.

> ***"மனிதன் பாவத்தைச் செய்து விட்டால், அதையே திரும்பத் திரும்பச் செய்யாதிருப்பானாக. அவன் அதில் திளைத்திருக்க வேண்டாம்; பாவ மூட்டை மிகவும் துக்ககரமானது."***

பாவங்கள் செய்தோர், தான் செய்த பாவங்களுக்காக மனம் வருந்தி இறைவனிடம் மன்னிப்புக்கோறி, இனிமேலும் பாவங்கள் செய்வதில்லை என்று உறுதி பூண்டு, அறம் அறிந்து, நல்வழி நடந்து, நற்செயல்கள் செய்தால்

அவர்களின் வாழ்வில் நன்மைகள் வரும் என்று பகவான் புத்தர் சொல்கின்றார்.

**"தான் செய்த பாவங்களை நற்செயல்கள் செய்து மறைக்கின்றவன், மேகத்திலிருந்து விடுபட்ட சந்திரனைப்போல் இந்த அழகை ஒளிபெறச் செய்கிறான்."**

இதுவரை உங்களுக்கு ஏன் தீய செயல்களைக் கண்டு அஞ்ச வேண்டும் என்பதை விளக்கிக் கூறினேன். தீய செயல்கள் இரண்டு உலகங்களிலும் துன்பம் தருவதால், தீயவற்றைக் கண்டு அஞ்ச வேண்டும். பகவான் புத்தரும், திருவள்ளுவரும் பாவங்கள் செய்யாதீர்கள் என்று இவ்வுலகிற்கு உபதேசம் செய்துள்ளார்கள். ஏன் பாவங்கள் செய்யக்கூடாது? பாவங்கள் செய்வதால் துன்பம் வரும். இங்கும் துன்பம். அடுத்த உலகிலும் துன்பம். இவ்வுலகில் மனிதர்களால், பாவங்கள் செய்யாமல் வாழ முடியாதென்றால், இவ்வுலகிற்குப் பாவங்கள் செய்யாதீர்கள் என்று உபதேசம் செய்ய மாட்டார்கள். இவ்வுலகில் பாவங்கள் செய்யாமல் வாழமுடியும். ஆகவே, பாவங்கள் செய்யாதீர்கள் என்று உபதேசம் செய்துள்ளார்கள்.

பாவங்கள் செய்து வாழ்வதால் நன்மைகள் வருமாயின் இவ்வுலகிற்குப் பாவங்கள் செய்யாதீர்கள் என்று உபதேசம் செய்ய மாட்டார்கள். பாவங்கள் செய்வதால் துன்பங்கள் வரும், இங்கும் துன்பம்; அடுத்த உலகிலும் துன்பம். ஆதலால், பாவங்கள் செய்யாதீர்கள் என்று உபதேசம் செய்துள்ளார்கள்.

ஆகவே, நாம் தீயவற்றை தீயினும் கொடியதாக கருதி, அஞ்சி, அறத்தை அறிந்து, நற்செயல்கள் செய்து, நல்வழியில் நடந்தோமென்றால் நமக்கு இரண்டு உலகங்களிலும் நன்மைகள் வரும்.

# மற்ற வெளியீடுகள்

1. அறவழி
2. தீவினையச்சம்
3. நல்வினைப்பயன்
4. கோபத்தினால் விளையும் தீமைகள்
5. இல்லற வாழ்க்கை
6. ஒழுக்கமுடைமை
7. உன் செயல்களுக்கு நீயே வாரிசு
8. மரணம்
9. அறிவுடைமை
10. இளமையில் சிந்திக்க வேண்டியவை
11. விரதம்
12. தண்டனை
13. கோபத்தை வெல்லும் வழி
14. ஓர் இளைஞனுக்கு பகவான் புத்தர் கூறிய அறிவுரை
15. மறுபிறப்பும் துன்பப் பிறப்புகளைக் கடக்கும் மார்க்கமும்
16. பொய்யான பக்தி
17. தாயும் தந்தையும்
18. மனசாட்சி இல்லாதவர்கள்
19. கருணை
20. அநாத பிண்டகர்
21. சேமவதி
22. பாவிகள்
23. நல்வாழ்வு
24. நான்கு மனைவிகள்
25. குற்றம் உணர்ந்து திருந்துதல்
26. அன்புடைமை
27. நன்றி மறந்தவர்கள்
28. அன்புடையோரும் அன்பில்லாதோரும்
29. ஒதுக்கப்பட்டவர்கள்
30. நேர்மை
31. பேராசை
32. நன்றியுடைமை
33. அடக்கமுடைமை
34. நல்லது செய்தால் நல்லது விளையும்
35. மன்னிப்பு
36. குற்றம்